[திரு. அ. தியாகராசன்] [5th August 1965

கொள்கிறேன். இரட்டிப்பாக ஆகி விட்டால் கடன் தீர்ந்ததாக ஆகிவிடும் என்றால், வட்டி, வட்டிக்கு வட்டி என்று வாங்குகிற வகையில் பிசினஸ் போய்விடும் என்று தனியார்கள் வேண்டுமானால் கொடுக்காமல் போகலாம். அரசாங்கம் விவசாயிகளுடைய நன்மையில் அக்கறை கொண்டு எல்லாவிதக் கடன்களையும் அரசாங்கமே கொடுக்கின்ற காரணத்தினால், தனியாரிடத்தில் வாங்க வேண்டிய அவசியம் ஏற்படாது. விவசாயிகள் விவசாய சம்பந்தமாக வாங்குகிறார்களே தவிர, சொந்த நலனை உத்தேசித்து வாங்குவதில்லை, சொந்த வேலைகளுக்கு வாங்குவதில்லை. ஆகவே இந்த மசோதாவை மீண்டும் ஆலோசித்து கனம் அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டு அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, டாம்டுபட் பிரின்சிபலை நாம் அனுசரிக்கவில்லை என்று சொல்வது சரியல்ல. முன்பு நிறைவேற்றப்பட்ட விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டப்படி டாம்டுபட் ப்ரின்சிபிள் இருக்கிறது. 1932-க்கு முன்னால் வாங்கியிருந்து இரட்டிப்பு ஆகி இருந்தால் ரத்து செய்ய வேண்டும் என்பது. அதோடு 6¼ விதத்திற்கு மேல் வட்டி வாங்கக் கூடாது என்று சட்டம் இருக்கிறது. 6¼ இருந்தும் இரட்டிப்பு ஆகியிருக்கலாம் என்றால், கடன் வாங்கினால் கொடுக்கின்ற எண்ணம் இருக்க வேண்டும். அப்படிக் கொடுப்பது இல்லையென்றால், இரட்டிப்பு ஆகிறது. அரசாங்கம் பரிபூர்ணமாகக் கடன் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டாலும் வேறு வகைகளில் கடன் வேண்டியிருக்கிறது. ஏதாவது கலியாணம் இருந்தால் கடன் வேண்டியிருக்கிறது. வேறு விதங்களில் கடன் வேண்டியிருக்கிறது. 6¼ விதம் என்று குறைக்கப்பட்ட பிறகு, டாம்டுபட் ப்ரின்ஸிபிளை ஏற்றுக்கொண்ட பிறகு, 6¼ விதம் இருந்தால் கூட இரட்டிப்பு ஆகிறது என்றால், நீண்ட காலத்திற்கு வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுப்பதில்லை என்று ஏற்படும். ஆகவே, இந்த மசோதாவை எதிர்க்கிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the Madras Agriculturists Relief (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 13 of 1965) be taken into consideration".

The motion was put and lost.

(2) *The Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill*, 1965.

MR. SPEAKER : The hon. Member Srimathi T. N. Anandanayaki who has given notice of this Bill is not in her seat. So it is deemed to have been withdrawn.

(3) *The Hindu Marriage (Madras Amendment) Bill*, 1965.

MR. SPEAKER : The hon. Member Sri S. Madhavan, who has given notice of this Bill is not in his seat. So it is deemed to have been withdrawn.

Both the lawyers (Srimathi T. N. Anandanayaki and Sri S. Madhavan) are not in their seats.